பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 10 | ஞாயிற்றுக்கிழமை | 24.03.2024 | அதிர்வு 236

### கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட

## இரு கடற்படையினர் உள்ளிட்ட மூவர் கைது

(என்.புவியரசன்)

கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட இரண்டு கடற் படையினர் உள்ளிட்ட மூவர் யாழ். காரை நகர் பகுதியில் வைத்து 06▶



### ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார்?

# மைத்திரி வெளியிட்ட தகவல் குறித்து உடன் விசாரணைகளை ஆரம்பிக்குக!

### பொலிஸ்மா அதிபருக்கு அமைச்சர் டிரான் அவசர பணிப்பு



இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட தகவல் தொடர்பில் உடனடியாகவிசாரணைகளைஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு நேற்று அவசர பணிப்புரை விடுத்துள்ளார். 06▶



## மைத்திரிபாலவை உடன் கைது செய்ய வேண்டும்

### முஷாரப் எம்.பி. வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள தகவல்களால் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், 06▶




வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் சத்தியலிங்கத்தின் முயற்சியால் மந்திகை வைத்தியசாலையில் நெதர்லாந்து அரசின் நேரடி உதவியில் – 500 கோடி ரூபா செலவில் – அமைக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவுக்கான புதிய கட்டடத் திறப்பு விழாவை ஒட்டிய விடயங்களை நேற்று இப்பத்தியில் பகிர்ந்திருந்தேன்.

இந்தக் கட்டமைப்பு உருவாக்கத்துக்கு எந்த பங்களிப்பும் செய்யாத பலரும் வந்து ‘உடையாரின் திருவிழாவில் 06▶







# புளொட் பிரமுகர் 'ஆர்.ஆர்' நினைவாக இலவச குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பம்


(கே.வசந்தன்)

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர் (ஆர்ஆ.ர்) நினைவாக இலவச குடிதண்ணீர்த் திட்டம் இன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் இந்த இலவச குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தாகசாந்தி நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், க.சிவனேசன், வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகரபிதா சந்திரகுலசிங்கம் மற்றும் கழகத்தின் முக்கிஸ்தர்கள், அன்னாரது உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



















# வவுனியாவில் இராணுவக் கோப்ரல் கைது ஊரில் அவர் வீட்டில் 235 ரவைகள் மீட்பு!

(கே.வசந்தன்)

வவுனியாவில் பணி புரியும் இராணுவ கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அங்குனுகொல பலஸ்ஸ பொலிஸார் இராணுவக் கோப்ரல் ஒருவரின் பரவகும்புக பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள தனியார் வீட்டைச் சோனை செய்த போது சமையலறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த - ரி56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் - 235 ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அந்த வீட்டில் வசித்து வந்த இராணுவக் கோப்ரலின் மனைவி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசணைகளையடுத்து கணவனான இராணுவ கோப்ரல் வவுனியாவில் பணியாற்றிய நிலையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா மற்றும் அங்குனுகொல பலஸ்ஸ பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.



# ஈஸ்டர் படுகொலைகள் தொடர்பான பிள்ளையானின் நூல் நேற்று வெளியீடு

(பழுவூரான்)

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) எழுதிய "ஈஸ்டர் படுகொலை: இன - மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும்"நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு அஞ்சனா விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நூல் வெளியீட்டு நிகழ்வில், சர்வமதத் தலைவர்களின் ஆசியுரை, வரவேற்பு நடனம் என்பன முதலில் இடம்பெற்றன. இதன் போது நூலாசிரியரினால் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதல் பிரதிகள் ஈஸ்டர் குண்டு தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளிற்கு வழங்கி வைக்கப்பட்டமையைத் தொடர்ந்து, சர்வமதத் தலைவர்களுக்கும் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சந்திரோதயம் கலை இலக்கியப் பெருமன்றத்தினால் இந்நூல் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் நூலாசிரியரின் இரண்டாவது படைப்பாகத் திகழ்கின்றது.

கடந்த 2019 ஆண்டு இடம் பெற்ற ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினால் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாக இந் நூல் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், இராஜாங்க அமைச்சரின் தாயார் கமலா சிவநேசதுரை மற்றும் திணைக்களத் தலைவர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறைவாசம் அனுபவித்த போது அவரது முதல் நூலான "வேட்கை" எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

ஆசியாவின் அதி நவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்ட பாரிய நூல் நிலையமொன்றை இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பில் அமைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.











# சோளம் விதை பதப்படுத்தும் நிலையத்தை விவசாய அமைச்சர் வவுனியாவில் திறந்தார்

(கே.வசந்தன்)

சோளப் பயிர்ச் செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம் விவசாய அமைச்சர் மஹிந்த அபயவீரவினால் வவுனியாவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியாவிற்கு விஜயம் செய்த விவசாய அமைச்சர் மஹிந்த அபயவீர பூவரசன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படும் நல்லின சோளப் பயிர்ச்செய்கை நிலங்களைப் பார்வையிட்டமையுடன், பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, வவுனியா, நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட சோளப் பயிர்ச்செய்கைக்கான விதை பதப்படுத்தும் மற்றும் விதை உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்து, அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டார். நிலையத்தில் விவசாயிகளுக்காக அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தையும் அவர் திறந்து வைத்து, வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்ட ஆணின் சடலம்

கால்வாயில் இருந்து சிதைவடைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

எல்பிட்டிய, மிரிஸ்வத்த பகுதியில் உள்ள கால்வாயில் இருந்து நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மிகவும் வீங்கியும் சிதைந்தும் காணப்படுகின்றமையால் அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது கொலையா அல்லது தற்கொலையா அல்லது வேறு விபத்தா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீதிமன்றம் அழைக்கும் வரையில் காத்திருக்காது உண்மையை மைத்திரி வெளிப்படுத்த வேண்டும்!

## மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை



"நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்காமல் தெரிந்த உண்மையை மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்த வேண்டும். உண்மையை மறைப்பதும் ஒருவகையில் குற்றமாகும்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி: முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மைச் சூத்திர தாரியைத் தாம் அறிந்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில்: அவரது கருத்து பாரதூரமானது. குண்டுத்தாக்குதல் தொடர்பில் அவருக்கு ஏதும் தெரிந்திருந்தால் அதனை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மை தெரிந்திருந்தும் அதனை மறைப்பதும் குற்றமாகக் கருதப்படும்.

கேள்வி: பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

பதில்: அவசரபட்ட வேண்டியதில்லை. உரிய நேரத்தில் எமது தீர்மானத்தை அறிவிப்போம்.

கேள்வி: ஜனாதிபதி வேட்பாளர் பிரச்சினைக்குரியதாக உள்ளதாலா பொதுத்தேர்தலைக் கேட்கின்றீர்கள் ?

பதில்: அவ்வாறில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் அரசியல் கட்சிதான் பொதுத்தேர்தலிலும் வெற்றி பெறும். சகல தரப்புக்கும் சம அந்தஸ்து கிடைக்கப்பெற வேண்டுமாயின் பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும்.

கேள்வி: கோப் குழுவின் தலைவராக ரோஹித அபேகுண வர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புகள் வெளிப்பட்டுள்ளனவே?

பதில்: ரோஹித்த அபேகுணவர்தன மக்கள் பிரதிநிதி. ஆகவே அவர் கோப் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வெளிநபரைத் தலைவராக நியமிக்கவில்லை.

கேள்வி: இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசியத் தேர்தல்கள் சவால்மிக்கதே?

பதில்: ஆம். இந்தச் சவால்களைக் காட்டிலும் பாரிய சவால்களை நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். தற்போதைய சவால்களையும் சிறந்த முறையில் வெற்றிக் கொள்வோம் – என்றார்.

## மைத்திரியின் சர்ச்சைக்குரிய கருத்து:

# சட்ட நடவடிக்கை எடுக்குமாறு குற்றப்புலனாய்வில் முறைப்பாடு




ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துத் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடளித்துள்ளார்.

மேற்படி முறைப்பாட்டை கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதன்போது, ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பில் தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி கூறியிருக்கும் விடயத்தில் உண்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைது செய்யப்பட்டு, உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். – என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சடையார் வாணம் விட்ட கதையாக' தத்தமது திருவிழாவை நடத்திச் சென்ற கதையையும் கோடி காட்டி இருந்தேன். அதற்காகப் பலருக்கும் என் மீது கொதிப்பு. அவர்கள் கொதித்து விட்டுப் போகட்டும். மன உளைச்சலைக் கொட்டித் தீர்த்த திருப்தி எனக்கு.

அதுவல்ல விடயம். இந்தத் திறப்பு விழாவை ஒட்டிக் கப்பல் ஏறவிருந்த மானம் காப்பாற்றப்பட்ட இன்னொரு கதை குறித்தும் தகவல் கிடைத்துள்ளது.

500 கோடி ரூபா கட்டடம். நெதர்லாந்து அரசு உதவியில் கைகூடியது.

கட்டடம் திறக்க முன்னரே அதன் மின் சார பட்டியல் ஐந்து கோடி 50 லட்சம் ரூபாவை தாண்டி விட்டது

இத்தொகையை யார் கட்டுவது, எந்த நிதியிலிருந்து கொடுப்பது, இதற்கு நிதி உண்டா எனத் தேட முன்பே - திறப்பு விழா ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்த நிலையில் - இலங்கை மின்சார சபை கட்டடத்துக்கான மின் விநியோகத்தையும் துண்டித்து விட்டது.

செய்வதறியாது ஏற்பாட்டாளர்கள் திணறியவேளை, கட்டடத்தை அத்துணை செலவில் கட்டித் தந்த நெதர்லாந்து அரசே மின்சாரக் கட்டண நிலுவையைத் தானே செலுத்தி, மேற்கொண்டு மின் இணைப்பை மீளப் பெற்றுக்கொடுத்துள்ளது.

கட்டித் திறக்க முன்பே இவ்வளவு மின்சாரக் கொடுப்பனவை ஏற்படுத்தும் கட்டுமானத்திற்கு ஒரு சூரிய மின்கலவசதியைக் கூட ஏற்படுத்தாத திட்டமிடல் இது என விமர்சிக்கப்படுகிறது. இந்த வெள்ளை யானையை எவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கொண்டிழுக்கப் போகின்றது என்பதே தற்போதைய கேள்வியாகவுள்ளது.

இதேநேரம் கட்டடத்தைக் கட்டி வழங்கிய நெதர்லாந்து அரசு, மின் விநியோகத்தை மீள ஏற்படுத்தி, திறப்பு விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்பினரின் மானத்தையும் காத்தது என்று கூறினால் அது மிகையாகாது.

'உடையார் வீட்டுத் திருவிழாவில் சடையார் வாணம் விட்ட கதையாக' இந்தத் திறப்பு விழாவில் 'கலர்ஸ்' காட்டிச் சென்ற பல மேதாவிகளுக்கு, கடைசி நேரத்தில் மின் துண்டிப்பு அவலம் நேர்ந்தமையும், நெதர்லாந்து உதவியில் அந்தக் கண்டம் தாண்டியமையும் தெரியாது. தாங்கள் விட்ட வாணம் சீறிப் பாய்ந்தது என்ற திருப்தியோடு அவர்கள் சென்றிருப்பார்கள்...!

## மைத்திரிபாலவை உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இலங்கையின் அரசியல் இறையாண்மைக்கு மாபெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் உண்மை எனில், குற்றச் செயலையும், குற்றவாளிகளையும் மறைத்த மைத்திரிபால உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்.

அத்துடன் அவரிடம் சரியான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சூத்திரதாரிகளுக்குக் கடுமையான தண்டனையை வழங்க வேண்டும்." - என்றார்.

# சபாநாயகர் யாப்பா நடத்துவது மிக மோசமான குடும்ப ஆட்சி!

## அநுரகுமார போட்டுத் தாக்கு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மிக மோசமான வகையில் குடும்ப ஆட்சியை முன்னெடுத்து வருகின்றார் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தீவிரமான முறையில் குடும்ப ஆட்சியை மேற்கொண்டு வருகின்றார்.

சபாநாயகரின்சகோதரன்வசந்தயாப்பா அபேவர்த்தன சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளராகச் செயற்படுகின்றார்.

இன்னொரு சகோதரனான சரத் யாப்பா அபேவர்த்தன சபாநாயகரின் இணைப்புச் செயலாளராகச் செயற்படுகின்றார்.

சபாநாயகரின் மைத்துனர் பிரேமானந்த குமசாரு இன்னொரு இணைப்புச் செயலாளராக உள்ளார்.

சபாநாயகரின் இன்னொரு சகோதரன் இந்துனில் யாப்பா அபேவர்த்தன ஊடகச் செயலாளராக உள்ளார்.

சபாநாயகரின் மகன் சமீர யாப்பா அபேவர்த்தன பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தராக உள்ளார்.

இந்த நியமனங்களை விட, சபாநாயகரின் இன்னொரு மகன் தேசிய லொத்தர் சபையின் தலைவராக நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது அவரது குடும்பத்தினரும் சபாநாயகருடன் பயணிக்கின்றனர்.

தனது பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் சபாநாயகர் செயற்படுகின்றார். இப்படிப்பட்டவர்களை அடுத்த தேர்தலில் மக்கள் நிராகரிக்க வேண்டும்." - என்றார்.

# மஸ்கெலியா நகரத்தில் மது பார் இரவில் சூறை

(செ.தி பெருமாள்)

மஸ்கெலியா நகரில் பிரதான வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

சிசிரிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு விசேட பொலிஸ் பிரிவொன்று விசாரணை நடத்திவருகின்றது.

நேற்றய் மதியம் 2 மணியளவில் ஹட்டன் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் நாய் கொண்டு வரப்பட்டு திருட்டில் ஈடுபட்ட நபரின் கை குட்டையின் பெறப்பட்ட வாசத்தில் இருந்து திருடனைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

மேலும்ஹட்டன்தடயவியல்பொலிஸார் கை ரேகைப் பதிவை மேற் கொண்டு வருகின்றனர்.

மதுபான விற்பனை நிலையத்தில் தற்போது உள்ள மதுபானப் பெறுமதிகள் சேகரிக்க பட்ட பின்னர் எவ்வளவு தொகை களவாடப் பட்டுள்ளது என்பது தெரிய வரும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பாக பல லட்சம் ரூபா பெறுமதி களவு போய் இருக்கும் என நம்பப்படுகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் மஸ்கெலியா நகரில் உள்ள மரக்கறி விற்பனை நிலையம் உட்பட மூன்று வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## மைத்திரி வெளியிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் தான் அறிந்துள்ளேன் என்று மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

அத்துடன், நீதிமன்றத்தால் கோரிக்கை விடுக்கப்படுமாயின் அல்லது உத்தரவிடப்படுமாயின் அது தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்குத் தான் தயார் என்றும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ராஜபக்ஷ குடும்பத்தினரே நாட்டைப் பாரிய பிரச்சினைக்கு இட்டுச் சென்றது என்று சுட்டிக்காட்டிய மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் அனைவரும் அறிந்துள்ளனர் என்றும் கூறியிருந்தார்.

தனது ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டதரப்பினருக்குஎதிராகவேதற்போது வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதி நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற மத நிகழ்வின்போது தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் தகவலை வெளியிடும்போது அதனை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும் என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தார்.

## இரு கடற்படையினர்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒருவரிடம் கஞ்சா இருந்த வேளை பொலிஸார் அவரைக் கைது செய்த சமயம் தனக்குக் கஞ்சா வழங்கியதாக இருவரின் தொலைபேசி இலக்கங்களை அவர் வழங்கியிருந்தார். கஞ்சாவுக்கான பணம் இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார். இதனால் கஞ்சாவுக்கானபணத்தைவந்துபெற்றுக்கொள்ளுமாறு கஞ்சாவை உடமையில் வைத்திருந்தவர் விநியோகித்தர்கள் இருவருக்கும் தொலைபேசியில் தகவல் வழங்கியிருந்தார்.

தொலைபேசித் தகவலை நம்பி அதற்கானப் பணத்தைப் பெற இருவர் வந்து கஞ்சாவை உடமையில் வைத்திருந்தவரிடம் பணத்தைப் பெற முயன்ற சமயம் மறைந்திருந்த பொலிஸார் பணத்தைப் பெற்றுக்கொள்ள சம்பவ இடத்துக்கு வந்த இருவரையும் மடக்கிப் பிடித்தனர்.

இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்ட இருவரும் கடற்படையினர் என்பது பின்னர் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.



# திருகோணமலையில் நேற்றுப் பக்திபூர்வமாக ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று அம்பிகையின் பக்தர்கள் பல்லாயிரம் பேரின் அரோகரா கோஷத்துடன் ஆதீன கர்த்தா வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக் குருக்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 5.00 மணிக்கு மூலஸ்தான பூஜையும், தம்ப பூஜையும், 6.15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் நடைபெற்று, 8.00 மணியளவில்

அம்பாள் தேரில் ஆரோகணித்து, விநாயகரும், முருகனும் முன்னே வர அம்பாள் தனக்கென அமைக்கப்பட்ட சித்திரத்தேரினில் பவனி வந்து

அடியார்களுக்கு காட்சியளித்தார்.

தேருக்கு பின்னால் அம்பிகையின் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதை காணக்கூடியதாக இருந்தது. மாணவ மாணவிகளின் இசை, நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. பக்தர்களின் தாகத்தை தீர்க்க போதியளவிலான தண்ணீர் பந்தல்களும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாலை 6.00 மணிக்கு மகா ரிஷப வாகனத் திருவிழாவும் பச்சைமேனி அருட்காட்சியும் நடைபெற்று தேர்த்திருவிழா நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மைத்திரியின் முட்டாள்தனம்

சில செயல்களைச் செய்வது குற்றமாகலாம்.

அதேபோல சில செயல்களைச் செய்யாமல் விடுவதும் கூடக் குற்றமாகும் சாத்தியம் உண்டு.

இந்த வகையில் செய்ய வேண்டிய சில செயல்களைச் செய்யத் தவறியமையால் குற்றம் இழைத்தவராகச் சிக்குப்படும் வழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு உள்ளது போலும்.

அவர் ஜனாதிபதியாக இருந்த போது ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் குறித்து அவரின் கீழ் இயங்கிய பாதுகாப்புத் தரப்புக்கு போதிய முன்னறிவித்தல்கள், எச்சரிக்கைகள் போன்றவை புலனாய்வுத் தகவல்களாக வழங்கப்பட்டும் உரிய பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டது.

உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளத் தவறிய கூட்டுப் பொறுப்பில் அவரும் உயர் நீதிமன்றத்தினால் தவறிழைத்தவராகக் காணப்பட்டு அறிவிக்கப்பட்டார்.

செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தவறிய பிழைக்காக அந்தக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்குச் செலுத்த வேண்டிய நஷ்டஈட்டில் 10 கோடி ரூபா பங்களிப்பை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்பதால் அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் வாய்ப்புக் கூட அவருக்கு இருக்கவில்லை.

பாதுகாப்பு முன்னேற்பாட்டைச் சரிவரச் செய்யாத தவறுக்கான குற்றப் பொறுப்புக்கு உள்ளாக்கப்பட்ட அவர், இப்போது அதே விவகாரத்தை ஒட்டி இன்னொரு கடப்பாட்டை - செயலை - செய்யத் தவறியமைக்கான சிக்கலை எதிர்கொள்ளும் சூழல் வந்திருக்கின்றது.

'நுணலும் தன் வாயால் கெடும்' என்பது போல தேவையில்லாமல் ஒரு கருத்தைத் தான் பெரிய மேதாவி என்ற நினைப்பில் அவர் வெளியிடப் போய், இப்போது சிக்கலில் மாட்டியிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் தான் அறிந்துள்ளார் என்று மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

அத்துடன், நீதிமன்றத்தால் கோரிக்கை விடுக்கப்படுமாயின் அல்லது உத்தரவிடப்படுமாயின் அது தொடர்பான விவரங்களை வெளிப்படுத்துவதற்குத் தான் தயார் என்றும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகள் தொடர்பில் தான் தகவலை வெளியிடும்போது அதனை மிகவும் இரகசியமாக வைத்திருக்க வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும் என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியிருந்தார்.

மிகவும் முட்டாள்தனமான - விவேகமற்ற - கருத்து வெளிப்பாடு இது. இப்படிக் கருத்து வெளியிடுபவர் எப்படி ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார் என்ற சந்தேகம் கூடப் பலருக்கும் நிச்சயம் வந்திருக்கும்.

இத்தகையவர் ஜனாதிபதியாக இருக்கும்போது கிடைத்த காத்திரமான புலனாய்வுத் தகவல்கள் கூட உரிய முறையில் கையாளப்பட்டிருக்க முடியாமல் போனமை சரியாகத்தான் இருக்கும்.

பயங்கரவாதச் செயல் ஒன்று தொடர்பாக முற்கூட்டிய அல்லது பின்னரான தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றைப் பாதுகாப்பு தரப்பினருக்கு அல்லது பொலிஸாருக்குத் தெரிவிக்காமல் இருப்பது குற்றம் என்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

புலிகளின் செயற்பாடுகள் குறித்து அறிந்திருந்தும் அவை குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்காமல் ஒளித்த குற்றத்திற்காக பல அப்பாவி தமிழர்கள் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவல் நெருக்கடிகள், சிறைவாசம் போன்றவற்றை அனுபவித்த விடயம் நம் மத்தியில் தாராளம்.

அப்படி இருக்கையில், பல நூற்றுக் கணக்கானோரைக் கொன்றொழித்த ஈஸ்டர் ஞயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகள் குறித்து தனக்குத் தெரியும், நீதிபதி கேட்டால் கூறுவேன் என்று மைத்திரிபால தெரிவிப்பது மிகவும் விவேகமற்ற கருத்து வெளிப்பாடு.

இத்தகைய விடயங்களில் பொலிஸார் தேடி வரும் வரை காத்திருப்பது கூட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்பட வேண்டிய விடயமாகும் என்பதை புரியாத ஒருவர்தான் இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியில் ஐந்து ஆண்டுகள் இருந்தாரா என்று கேள்வி எழுவது நியாயமானது.

ஏற்கனவே ஈஸ்டர் ஞயிறுத் தாக்குதல் நடைபெறாமல் தடுக்கத் தவறிய குற்றத்திற்காக 10 கோடி ரூபா நஷ்டஈட்டைச் செலுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் மைத்திரியார், குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் பற்றிய விவரங்கள் அறிந்திருந்தும், அவற்றைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கத் தவறிய குற்றத்திற்காக மற்றொரு தண்டனையையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# ரஷ்ய தலைநகர் மொஸ்கோ தாக்குதலில் 143 பேர் உயிரிழப்பு, 140 பேர் காயம்!





ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் அரங்கொன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143 ஆக அதிகரித்துள்ளது.

தாக்குதலில் 140 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் இதுவரை 11 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். நால்வர் தாக்குதலுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளனர் என ரஷ்ய பாதுகாப்பு பிரிவினரால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகரில் உள்ள க்ரோகஸ் நகரின் கட்டடத்தில் அமைந்துள்ள அரங்கில் இடம்பெற்ற இசை நிகழ்வின் போது ஆயுதம் ஏந்திய குழுவினர் நுழைந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராணுவ உடைக்கு ஒத்த உடையை அணிந்திருந்த துப்பாக்கிதாரிகள், க்ரோகஸ் நகரின் கட்டடத்தின் நுழைவாயில் ஊடாக உள்நுழைந்த போது அங்கு பிரபல பிக்னிக் இசைக் குழுவின் இசைக்கச்சேரி இடம்பெறவிருந்தது.

பாதுகாப்பு ஊழியரும் அவரது உதவியாளரும் பிரதான நுழைவாயிலில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த போது, ஆயுதம் தாங்கிய குழுவினரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. பின்னர் அவர்கள் அரங்கிற்குள் நுழைந்துள்ளனர்.

கீழ் மாடியிலிருந்தவர்கள் மீதும் ஆயுததாரிகளால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை என்பதுடன், அவரது பிரதிநிதி ஒருவர் இந்த தாக்குதல் தொடர்பில் இரங்கல் செய்தியை வெளியிட்டு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த தாக்குதலை பயங்கரவாத தாக்குதலென ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், துப்பாக்கிதாரிகளை கொல்ல வேண்டுமென பாதுகாப்பு பேரவையின் பிரதித் தலைவர் திமித்ரி மெத்வதேவ் உத்தரவிட்டுள்ளார்.

இந்த தாக்குதலுடன் உக்ரைன் தொடர்புபட்டிருந்தால், அந்நாட்டின் உயர் அதிகாரிகளைத் தேடி அழிக்க வேண்டுமெனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த தாக்குதலுக்கும் தமது நாட்டிற்கும் எந்தவொரு தொடர்பும் இல்லையென உக்ரைன் தெரிவித்துள்ளது.

தாக்குதலின் பொறுப்பை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலின் பின்னணியில் தாம் உள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரும் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா மீது தாக்குதல் நடத்துவதற்கான தேவை, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிற்கு இருந்ததாக புலனாய்வுத் தகவல்கள் ஊடாக தெரியவந்ததாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் தொடர்பில் தாம் எச்சரிக்கை விடுத்ததாகவும் அதனை ரஷ்யா கவனத்திற்கொள்ளவில்லையெனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

பாரிய கூட்டங்களில், நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டாமென ரஷ்யாவிலுள்ள அமெரிக்க பிரஜைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரே அமெரிக்க தூதரகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாஸ்கோவிலுள்ள விமான நிலையம், ரயில் நிலையம் உள்ளிட்ட பிரதான இடங்களில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பின்னர் பொதுமக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

உலக நாடுகளின் அரச தலைவர்கள் பலரும் இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் வெளியிட்டுள்ளனர்

# இராணுவத் தளபதியானார் உகண்டா ஜனாதிபதியின் மகன்



உகண்டாவின் ஜனாதிபதி யோவேரி முசெவேனி தனது மகன் முஹூ சி கைனெருகபாவை இராணுவத் தளபதியாக நியமித்துள்ளார் என அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

48 வயதான முஹூ சி கைனெருகாபா, இராணுவத்தில் ஒரு ஜெனரலாக பதவி வகிக்கும் நிலையில் இந்த பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை. 40 ஆண்டுகளாக கிழக்கு ஆபிரிக்க நாடான உகண்டாவை ஆட்சி செய்து வரும் 79 வயதான தமது தந்தையிடமிருந்து ஜனாதிபதி பதவியை ஏற்க கைனெருகபா தயாராக இருகின்றார் என நீண்ட காலமாக தெரிவிக்கப்படுகின்றது.

# மீனவர்களை விடுதலை செய்ய கோரி தொடர் வேலை நிறுத்தம் ஆரம்பம்









இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுதலை செய்ய கோரி நேற்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்களை படகுடன் விடுதலை செய்யாவிட்டால் எதிர்வரும் மக்களவைத் தேர்தலை புறக்கணிக்க போகின்றோம் என மீனவர்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

இராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து கடந்த புதன் கிழமை மீன் பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐந்து படகையும் அதிலிருந்த 32 மீனவர்களும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் தேதி மீன்பிடிக்க சென்று இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள விசைப்படையின் ஓட்டுநர்கள் ஐந்து பேர் உட்பட 37 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

மேலும் எதிர்வரும் 8 ஆம் திகதி இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மீனவர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை உள்ளிட்டவற்றை ஒப்படைத்து போராட்டம் நடத்த உள்ளனர்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்குள் மீனவர்கள் படகுடன் விடுதலை செய்யப்படாவிட்டால் இராமேஸ்வரம் மீனவர்கள் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்காமல் தேர்தலை புறக்கணிக்க போவதாக தீர்மானித்துள்ளனர்.

வேலை நிறுத்த போராட்டம் காரணமாக இராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன் பிடிக்க கடலுக்கு செல்லாமல் கடலில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது .

இந்த வேலை நிறுத்தம் காரணமாக சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் நேரடியாகவும் 50 ஆயிரம் மீன்பிடி சார்பு தொழிலாளர்களும் வேலையை இழந்துள்ளனர்.

# தமிழகத்துக்கும் காஷ்மீர் நிலை ஏற்படலாம் திருவாரூர் பிரசாரத்தில் ஸ்டாலின் எச்சரிக்கை




“காஷ்மீருக்கு ஐந்து ஆண்டுகளாக தேர்தல் கிடையாது. இப்போது கூட, ஜம்மு – காஷ்மீருக்குத் தேர்தல் அறிவிக்கவில்லை. இதுதான் பா.ஜ.க. பாணி சர்வாதிகாரம். இந்த நிலைமை நாளை தமிழகத்துக்கும் ஏற்படலாம். ஏன், பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்றால் இதே நிலைதான் அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்படும்.”

– இவ்வாறு தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நடைபெற இருக்கும் தேர்தல் மிகமிக முக்கியமான தேர்தல். ஏதோ பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவதற்கான தேர்தலாக மட்டும் யாரும் இதை நினைத்துவிடக் கூடாது. இந்தியாவில் இனி ஜனநாயகம் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கான தேர்தல் இது.

இந்தியாவின் மாநிலங்களை – மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத்தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை–எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பா.ஜ.க. இன்னொரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது. பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது.

நாட்டில் ஜனநாயக அமைப்பு முறையே இருக்காது. நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. இவ்வளவு ஏன், மாநிலங்களே இருக்காது. முதலில் நாம் எல்லாரும் இதை உணர வேண்டும். கண்ணுக்கு முன்னால் ஜம்மு – காஷ்மீர் மாநிலம் சிதைக்கப்பட்டதைப் பார்த்தோம்.

காஷ்மீருக்கு ஐந்து ஆண்டுகளாக தேர்தல் கிடையாது. இப்போதுகூட, ஜம்மு – காஷ்மீருக்குத் தேர்தல் அறிவிக்கவில்லை. இதுதான் பா.ஜ.க. பாணி, சர்வாதிகாரம். இந்த நிலைமை நாளை தமிழகத்துக்கும் ஏற்படலாம். ஏன், பா.ஜ.க., மீண்டும் வெற்றி பெற்றால் இதே நிலைதான் அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்படும்.”– என்றார்.

# வவுனியாலில் காசநோயால் 2023 இல் 3 பேர் உயிரிழப்பு

## 58 பேருக்கு பாதிப்பு இனங்காணப்பட்டனர்




(கே.வசந்தன்)

காசநோயினால் வவுனியாவில் கடந்த வருடம் மூன்று பேர் இறந்துள்ளமையுடன், 58 பேர் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் என வவுனியா காசநோய்க் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவித்த போது –

இம்முறை “ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்” எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி (இன்று) நினைவுகூரப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரை ஒரு இலட்சம் பேரில் 62 பேர் காசநோயாளர்களாக இனம் காணப்படவேண்டும். இருப்பினும் 4 ஆயிரம் பேர் வரை இனம் காணப்படாமல் இருக்கின்றனர். நாட்டில் இறப்பிற்கு காரணமான மூன்றாவது நோயாக இது காணப்படுகின்றது.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 58 நோயாளர்கள் இனம்காணப்பட்டனர். அதில் மூன்று பேர் உயிர் இழந்துள்ளனர். தொடர்ச்சியாக இரு வாரங்களிற்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது வைத்தியசாலைகளுக்கு சென்று சாதாரண சளிப் பரிசோதனையினை இலவசமாக செய்து கொள்வதன் மூலம் இந்த நோயினை இனம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறு நீரக நோயாளர்கள், மூட்டுவாதம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய் கிருமி தங்ககூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனை செய்வதன் மூலம் அதனைக் கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டால் ஆறு மாதத்திற்கு நேரடிக் கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்தலாம். அது தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்பிற்கு வழிவகுக்கும். – என்றார்.

# ஏப்ரல் முதல் வாரத்தில் மாபெரும் போராட்டம்!

## 18 தொழிற்சங்கங்கள் தீர்மானம்

ஏப்ரல் முதல் வாரத்தில் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட 18 தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

அரச நிர்வாக அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அரசு தொடர்ந்து சாதகமான பதில் அளிக்காததால், நிர்வாகப் பரீட்சை திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரியுடன் தொழிற்சங்கங்கள் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமருடனான கலந்துரையாடலின்போது, நிறைவேற்று அதிகாரிகள் தம்மைப் பாதித்துள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், மார்ச் மாதம் 31ஆம் திகதி அமைச்சரவையில் உரிய தீர்வுகள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்ப்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள அரச நிறைவேற்று அதிகாரிகளின் குழு, இல்லாவிடின் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

கல்வி நிர்வாக சேவைகள் தொழிற்சங்கம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழிற்சங்கம், கணக்காளர் தொழிற்சங்கம், பரீட்சைகள் திணைக்களத் தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களின் பங்களிப்புடன் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனியின் விலையில் சடுதியான அதிகரிப்பு



புறக்கோட்டை மொத்த சந்தையில் ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் மொத்த விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் மொத்த விலை 20 முதல் 25 ரூபா வரையில் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் 255 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் மொத்த விற்பனை விலை தற்போது 275 ரூபாவிலிருந்து 280 ரூபா வரை அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் அத்தியாவசிய உணவு பொருள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன கருத்து வெளியிடுகையில், அவ்வாறான விலை அதிகரிப்பு எதுவும் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ஒரு கிலோகிராம் சீனியின் மொத்த விற்பனை விலை உயர்விற்கான காரணம் குறித்து புறக்கோட்டையில் உள்ள பல மொத்த வர்த்தகர்கள் கருத்து தெரிவிக்கையில்

“தற்போதைய நாள்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில் சீனியின் விலை அதிகரித்துள்ளமை சிக்கலை ஏற்படுத்தியுள்ளது” – என்றனர்.

எவ்வாறாயினும், அண்மைய நாள்களில் சுங்க அதிகாரிகள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையின் தாக்கத்தினால் சீனியின் விலை அதிகரித்துள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் இருந்து டாக்காவிற்கு நேரடி விமான சேவைகள் விரைவில்




ஏப்ரல் மாதத்தில் கொழும்பு மற்றும் பங்களா தேஷ் தலைநகர் டாக்காவிற்கு இடையில் நேரடி விமான சேவையை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைவதாக குறைந்த கட்டணத்தில் விமான சேவையை வழங்கும் ஃபிட்ஸ் ஏர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விமான சேவையானது இலங்கைக்கும் பங்களா தேஷுக்கும் இடையில் மலிவு விலையிலான பயண விருப்பங்களுக்கான வளர்ந்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், பிராந்திய விமானப் போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக பிரதிபலிக்கிறது.

பங்களாதேஷின் வேகமாக விரிவடைந்துவரும் பொருளாதாரத்தின் வெளிச்சத்தில், இலங்கை வர்த்தகர்களிடமிருந்து ஆர்வத்தை ஈர்க்கும் வகையில், டாக்கா ஒரு பிரபலமான இடமாக உருவாகி வருகிறது.

இந்தப் போக்கை அங்கீகரித்து, வளர்ந்து வரும் இந்த சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்த கட்டணத்தில், சரியான நேரத்தில் மற்றும் திறமையான விமான இணைப்பை வழங்குவதற்கு ஃபிட்ஸ் ஏர் உறுதிபூண்டுள்ளது.

இந்த விமான சேவை ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆரம்ப கட்டணமாக 74 ஆயிரத்து 600 ரூபாவாக அறவிடவுள்ளது.

தற்போது ஃபிட்ஸ் ஏர் கொழும்பில் இருந்து டுபாய், மாலி மற்றும் சென்னைக்கு நேரடி சேவைகளை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதித் தேர்தலை ஓரணியில் நிற்பதன் மூலம் தமிழ்க் கட்சிகள் சவாலுக்கு உட்படுத்த வேண்டும்!

## ஜி.ரி.லிங்கநாதன் வலியுறுத்து

(கே.வசந்தன்)

சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியிலே இருந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை மிகப்பெரிய சவாலுக்கு உட்படுத்த வேண்டும். இதுவே மரணித்த அனைத்து இயக்கப் போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் நாங்கள் செய்கின்ற ஆத்மார்த்தமான அஞ்சலியாக இருக்கும் என்று முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர் (ஆர்.ஆர்) அவர்களின் நினைவு நிகழ்வில் நேற்றையதினம் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அமரர் வேலாயுதம் நல்லநாதர் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளராக இருந்த போது கட்சிகளை இணைப்பதிலே மிகப்பெரும் பங்காற்றியிருந்தார். அவரது நினைவாக இலவச குடிதண்ணீர்த்த ட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று அறிவிக்கப்படவுள்ள நிலையில் தென்னிலங்கையில் பல கட்சிகள் பிரிந்து நிற்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ்த் தரப்பானது இம்முறையும் சிங்களப் பேரினவாத வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதை தவிர்க்கவேண்டும்.

அப்படி வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் எந்த வேட்பாளர் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எழுத்து மூலமான ஒப்புதலை தருகின்றாரோ அந்த வேட்பாளர்கள் தொடர்பாக பரிசீலிக்க முடியும்.




இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து ஒவ்வொரு தேர்தலிலும், தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி மாத்திரமல்ல, தமிழ் தேசிய பரப்பிலே இருக்கின்ற சகல தமிழ் கட்சிகளும் ஓரணியிலே இருந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மிகப்பெரிய சவாலுக்கு உட்ப்படுத்தவேண்டும்.

இதுவே, நாங்கள் தமிழ் மக்களுக்கு செய்யப்படக்கூடிய உண்மையான கைமாறாகவும், மரணித்துப்போன அனைத்து இயக்கங்களின் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் செய்கின்ற ஆத்மார்த்தமான அஞ்சலியாகவும் இருக்கும். – என்றார்.

# கோப் குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்குமாறு கட்சிகளுக்கு அறிவிப்பு

கோப் குழுவில் இருந்து விலகிய உறுப்பினர்களுக்குப் பதிலாக வேறு உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடுமாறு அந்தந்தக் கட்சிகளுக்கு அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ் தெரிவித்துள்ளார்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கோப் குழுவில் இருந்து விலகியமை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து எவ்வித விடயங்களும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோப் குழுவில் இவ்வாறான சம்பவம்




இடம் பெற்றமை இதுவே முதல் தடவை என பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கோப் குழுவில் இருந்து 10 உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

அநுர குமார திசாநாயக்க, துமிந்த திசாநாயக்க, வசந்த யாப்பா பண்டார, எஸ்.எம். மரிக்கார், இரான் விக்ரமரத்ன, சாணக்கியன், பேராசிரியர் சரித்த ஹேரத், தயாசிறி ஜயசேகர, காமினி வலேபோட, ஹேஷா விதானகே ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே கோப் குழுவிலிருந்து விலகியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன கோப் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டமையினால் இவர்கள் அக்குழுவிலிருந்து விலகினர்.




# தமிழரசுக் கட்சியை ஒதுக்கி விட முடியாது; ஒற்றுமைக்குள் கொண்டு வரவே வேண்டும்!

## இவ்வாறு வலியுறுத்துகின்றார் செல்வம் எம்.பி

**(கே.வசந்தன்)**

தமிழரசுக் கட்சியை ஒதுக்கிவிட முடியாது. ஒற்றுமைக்குள் கொண்டு வர வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எந்தத் தேர்தலையும் சந்திப்பதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடந்தால் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் இனப்பிரச்சினை சார்ந்து தமிழ் தரப்பிற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். வெறுமனே கருத்துச் சொல்லிவிட்டு ஏமாற்றுகின்ற நிலைமையை இம்முறை மக்கள் ஏற்க மாட்டார்கள். அதற்கு உடந்தையாக நாங்களும் இருக்கமாட்டோம்.

பொதுவேட்பாளர் விடயத்தை நாம் சரியாகக் கையாளவேண்டும். ஒருவரை நிறுத்திவிட்டு சொற்ப வாக்குகளை பெறும் நிலை இருந்தால் ஒட்டுமொத்த தமிழினத்தின் மானமே போய்விடும். எனவே சரியான நெறிப்படுத்தலின் ஊடாகவே அந்த விடயத்தை செய்ய வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி எமது மக்களும், நாங்களும் சந்திக்கத் தயாராகவே இருக்கின்றோம்.

ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். ஐ. நாவுக்குக் கடிதம் எழுதுவது, பாரத பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுவது ஒற்றுமையாகச் சேர்ந்து செய்தோம். நடக்கவிருக்கும் எமது. கட்சியின் மாநாட்டில் வலுவான ஒரு கோரிக்கையை முன்வைக்க இருக்கின்றோம். எங்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்று ஏளனப்படுத்தும் விமர்சனத்தைத் தொடர்ச்சியாகச் சந்திக்கின்றோம். ஒற்றுமை இல்லை எனில் நாம் வெற்றி பெற முடியாது.

எனவே அரசியல் கதிரைகளுக்காக உசுப்பேத்தும் வசனங்களை மாத்திரம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. அனைவரையும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால், எமது மண்ணை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால், நாம் ஓர் அணியிலே இருக்க வேண்டும். அப்படியிருந்தாலே அரசாங்கம் எம்மை திரும்பி பார்க்கும் நிலமை ஏற்படும். அத்துடன் சர்வதேசத்தின் பார்வையையும் பெறமுடியும். அப்போது தென் இலங்கை எங்களை பார்த்து அச்சப்படும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

தமிழரசுக் கட்சியை நாம் ஒதுக்கிவிட முடியாது. பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றது. இந்த ஒற்றுமைக்குள் நாங்கள் கொண்டு வரவேண்டும். ஆனால் பொதுச்சின்னம் என்பதே எமது கருத்து. பொதுச் சின்னமாக குத்துவிளக்கு அமைந்திருக்கின்றது. அவர்களோடு பேசி பொதுச் சின்னத்தின் கீழ் அணிதிரள்வதற்கான முயற்சியினை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்ளுவோம். தனிப்பட்ட கட்சியின் கீழ் எமது ஒற்றுமை இருக்காது. - எனத்தெரிவித்தார்.

# ரெலோவின் தலைவராக திரும்பவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவு!

(கே.வசந்தன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மீண்டும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுக்குழு கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற பின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் –

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11 ஆவது தேசிய மாநாடு ஞாயிறன்று (இன்று) வவுனியா மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதையொட்டி கட்சியின் முக்கிய பதவிநிலைகள், தலைமைக்குழு, நிர்வாக குழு, மத்திய குழு என்பவற்றுக்கான தெரிவு இடம்பெற்றது. வடக்கு – கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் இருந்தும் பொதுக் குழு உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

எமது கட்சியின் எதிர்கால நடவடிக்கைக்கான குழுக்களையும் பதவி நிலைகளையும் தெரிவு செய்துள்ளனர். மிகவும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும், கட்சியினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் இந்த தெரிவு இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் தலைவராக தொடர்ந்தும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளர் நாயகமாக நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா), தேசிய அமைப்பாளராக பிரசன்னா இந்திரகுமார், உப தலைவராக ஹென்றி மகேந்திரன், நிதிச் செயலாளராக சுரேன் குருசாமி, நிர்வாகச் செயலாளராக விந்தன் கனகரத்தினம், இளைஞரணி செயலாளராக செந்தில்நாதன் மயூரன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் எதிர்காலத்தில் கட்சியின் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுப்பார்கள் எனத் தெரிவித்தார்.

# எஞ்சிய நிதியுதவியையும் இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளதாம்!

## பிரதமர் தினேஷ் குணவர்தன தகவல்

எஞ்சிய நிதியுதவியையும் இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு இலங்கை தகுதி பெற்றிருப்பது வெற்றி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவிசாவளை ஆதார வைத்திய சாலையில் புதிய சத்திரசிகிச்சை பிரிவிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை அண்மையில் தாம் சந்தித்திருந்தார் எனவும் பிரதமர் தெரிவித்தார்.



நாடு வளர்ச்சியை நோக்கிய நிலையான பாதையை அடைந்துள்ளதால், சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்கால நிதியுதவியை விரைவில் வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு நாளை முதல் மதிய உணவு

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் நாளை முதல் ஆரம்பிக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள 1,700,000 பாடசாலை மாணவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வேலைத்திட்டத்திற்காக 26 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.





# வடக்குக் கடல் அன்னையைக் காத்தல்!

"...எமது வளவுக்குள் அத்துமீறி நுழைந்து தென்னை மரத்தில் தேங்காயை பிடுங்கிச் செல்பவனை திருடன் என்றே விளிப்போம். அவனை சட்டப்படி தண்டிக்க வேண்டும். அதை விடுத்து அவனோடு பேச்சுவார்த்தை நடத்தும் எந்தத் தேவையும் இல்லை. அப்படித்தான் இந்திய மீனவர்களும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் வளத்தை சூறையாடுகிறார்கள். அவர்களை சட்டப்படி தண்டித்தாக வேண்டும். மாறாக, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதும் இல்லை..." என்று கொழும்புப் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித் துள்ளார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அறிவோர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக் குள்ளாக்கும் முகமாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்களையும் கடல் வளங்களையும் சூறையாடுவது என்பது தங்களின் பிறப்புரிமை போலவே இந்திய மீனவர்கள் கருது கிறார்கள். அவர்களிடம் எந்தவித குற்றவுணர்ச்சியும் இல்லை. மாறாக, திருட்டுக்குணமும் அத்துமீறும் ஏதேச்சதிகார சிந்தனையும் தலைவிரித்தாடுகின்றன. வடக்கு மீனவர்கள் தங்களின் பாரம்பரிய கடல் எல் லைகளைத் தாண்டி அத்துமீறி எந்தக் கடற்பரப்புக் குள்ளும் நுழைவது இல்லை. எப்போதாவது இயற்கை இடர்பாடுகளினால் எல்லை தாண்டி படகுகளும் வள் ளங்களும் செல்வதுண்டு. அப்போதெல்லாம் அவர் களை தமிழக கடலோர காவற்படையும், இந்திய கடற்படையும் கைது செய்து சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றன. அல்லது, இந்தியக் கடற்பரப்பில் நுழையும் இலங்கை மீனவர்களை தடுப்பு முகாம்களில் வைத்திருக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இந்திய மீனவர்களைப் பொறுத்தளவில் இலங்கைக் கடற்பரப்பில் எல்லை மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவர்களில் 95 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தெரிந்து கொண்டே அத்துமீறுபவர்கள். மிகுதி 5 வீதத்தினர் வேண்டுமானால் இயற்கை பேரிடர், வானிலை மாற்றங்களினால் எல்லைத்தாண்டுபவர்களாகக் கொள்ளலாம்.

இலங்கைக் கடற்பரப்பில் நாளுக்கு நாள் இழுவை அடிமடிகளைக் கொண்ட ஆயிரக்கணக்கான இந்திய பெருவள்ளங்கள் (ட்றோலர்கள்) அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இவற்றினால் வடக்கு மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது மாத்திரமின்றி, தொழில் உப கரணங்களும் அபகரிக்கப்பட்டுகின்றன. அல்லது, தொழில் உபகரணங்கள் சிதைக்கப்படுகின்றன. இன்னும் சில சந்தர்ப்பங்களில் இரு தரப்பு மீனவர்களுக்கு இடை யிலான முரண்பாடுகள் வன் முறைக் கட்டத்தை எட்டுகின்றன. இரு ஆண்டுகளுக்கு முன்னர், வட மராட்சிக் கிழக்கின் வெற்றி லைக்கேணி கடற்பரப்பில் வைத்து மீனவர் ஒருவர் இந்திய பெருவள்ளத்தினரால் படுகொலை செய்யப்பட்டதான குற்றச்சாட்டு உண்டு. இப்படியான முரண்பாடுகள் என்பது தொடர் அச் சுறுத்தலாக மாறி வருகின்றன. வடக்கு மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களான படகுகள், வலைகள், இயந்திரங்கள் மற்றும் திசை காட்டும் கருவிகள் உள்ளிட்டவற்றை விட இந்தியப் பெருவள்ளங்களின் உபகரணங்கள் அதிநவீன மானவை. அந்தப் படகுகளில் இருக்கும் திசைக்கருவிகள் மீன்கள் எந்தப்பரப்பில் இருக்கின்றன என்பது தொடக்கம் முக்கிய விடயங்களை அடையாளம் காணும் அளவுக்கான அதிநவீனக் கருவிகளாகும். அந்தக் கருவிகளினால் கடல் பரப்பில் எங்கிருந்தாலும், அந்தக் கடற்பரப்பு எந்த நாட்டுக்கு சொந்தமானது, எவ்வளவு தூரம் எல்லை தாண் டியிருக்கின்றோம் என்பது வரையில் தெளிவாகக் கட்டக் கூடியது. அப்படியிருக் கையில், இந்தியப் பெரு வள்ளங்கள் தெரிந்து கொண்டுதான், இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவ்வாறான அத்துமீறல்களை எந்தக் காரணங்கொண்டும் அனுமதிக்கமுடியாது. தொடர்கைதுகள், பெருவள்ளங்கள் தொடங்கி தொழில் உபகரணங்களை கையகப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளினால்தான் ஓரளவுக்காவது கட்டுப் படுத்திக் கொள்ள முடியும். ஆனால், இலங்கைக் கடற் றொழில் அமைச்சும், கடற்படையும், பொலி ஸாரும் போதிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை. மாறாக, இந்திய மீனவர்களுக்கு சாதகமான தீர்மானங்களை எடுப்பதை இலக்காக கொண்டு நடந்து கொள்கின்றன.



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைக் கடற்பரப்பில் இழுவை அடிமடி (Bottom trawling) தொழில் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. அதுபோல, தங்கூசி வலைகள், இலைதளைகளை கடலுக்குள் போட்டு மீன்பிடிக்கும் முறைகளும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முறைகளினால் மீன்களைப் பிடிக்கும் போது, கடல் வளங்கள் பாரிய அளவில் அழிக்கப்படுகின்றன. வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுதல் என்பது, பாரம்பரிய கடற்பரப்பின் வளங் களையும் சூழலையும் அப்படியே பேணுவதுமாகும்.

தொடர்ச்சி▼

# வடக்குக் கடல் அன்னையைக் காத்தல்!

தொடர்ச்சி▲

அதனால்தான், வடக்கு மீனவ சங்கங்கள் இணைந்து இழுவை அடிமடி தொழில் நடவடிக்கைகளுக்கான தடையை முன்னிறுத்தி கொண்டு வந்தார்கள். அப்படி, தங்களுக்கு வாழ்வாதாரத்தை தரும் கடல் அன்னையை காப்பாற்றும் பொறுப்போடு வடக்கு மீனவர்கள் செயற்படும் போது, இந்திய மீனவர்களோ அத்துமீறி நுழைந்து மீன்களை அள்ளிச் செல்வதோடு, கடல் வளங்களையும் அழித்தொழிக்கிறார்கள். ஏற்கனவே, இந்தியக் கடற்பரப்பின் வளங்கள் இந்திய மீனவர்களின் இழுவை அடிமடி தொழிலினால் பெருவாரியாக அழிந்துவிட்டன. அதனால்தான், இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் இனவிருத்தி என்பது பகுதியளவாகக் குறைந்துவிட்டது. அப்படியான நிலையொன்றை இலங்கைக் கடற்பரப்பிலும் செய்து முடிப்பதற்கான மூர்க்கத்தோடு இந்திய மீனவர்கள் இருக்கிறார்கள் என்றுதான், அவர்களின் அத்துமீறல்களைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் என்பது இராஜதந்திர விடயமாக பார்க்கும் கட்டத்தைத் தாண்டிவிட்டது. இனி வரும் காலத்தில் தொடர் சட்ட நடவடிக்கைகளின் மூலம், அதுவும் பாரிய தண்டனைகளின் மூலம்தான் இவ்வாறான அத்துமீறல்களைத் தடுக்க முடியும். இல்லையென்றால், வடக்கு மீனவர்கள் வாழ்வாதாரத்தைத் தொலைத்துவிட்டு அல்லாட வேண்டியிருக்கும். வடக்கு மீனவர்கள் கிட்டத்தட்ட இரண்டு தசாப்த காலம் (1990 முதல் 2009 வரை) தங்களின் வாழ்வாதாரத்தைத் தொலைத்திருந்தார்கள். அதாவது ஆழ்கடல் மீன்பிடி இலங்கைக் கடற்படையினால் தடுக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதியிலும் இந்திய மீனவர்களே, ஏகபோக நிலையில் இலங்கைக் கடற்பரப்பில் மீன்களை அள்ளிச் சென்றிருக்கிறார்கள். அந்த நினைப்பில் தொடர்ந்தும் அவ்வாறான அத்துமீறல்களை தங்களின் பிறப்புரிமை மாதிரி இந்திய மீனவர்கள் கருதுகிறார்கள்.

அத்தோடு, இலங்கைக்குள் கடத்தப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் இந்திய பெருவள்ளங்களினால் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் உண்டு. ஏனெனில், வடக்கு கடற்பரப்பில் வைத்து பல தடவைகள் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்திய மீனவர்கள் போர்வையில் பெருவள்ளங்களில் போதைக் கடத்தல் கும்பல்களும் செயற்படுகின்றன. அப்படியான கட்டத்தில் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களையும் போதைக் கடத்தல் கும்பல்களையும் கட்டுப்படுத்துதல் அத்தியாவசியமாகின்றது. அதனைச் செய்வதற்கு இலங்கைக் கடற்றொழில் அமைச்சருக்கோ, கடற்படைக்கோ, பொலிஸாருக்கோ என்ன தடை என்பது தெரியவில்லை. சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் என்ன மாதிரியான இராஜதந்திர தடை இருக்கின்றது என்பதும் புரியவில்லை. கடற்றொழில் அமைச்சராக வடக்கைச் சேர்ந்தவரான டக்ளஸ் தேவானந்தா இருக்கின்ற நிலையில், அவரினால் கூட வடக்கு மீனவர்களின் எண்ணப்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பது மிகமோசமான கட்டம். வாய்மாலங்களைத் தாண்டி முறையான நடவடிக்கைகளை நோக்கி டக்ளஸ் தேவானந்தா நகர வேண்டும். மாறாக, நடவடிக்கைகளை எடுத்தால், இந்தியா கோபித்துக் கொள்ளும் என்று நினைப்பதும், அதற்காக அத்துமீறல்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல.

தென் இலங்கை பேரினவாதம் வடக்கு கிழக்கை நோக்கி தங்களின் கொடுங்கரங்களை நீட்டிக் கொண்டிருக்கின்றது. நில அபகரிப்பை திட்டமிட்ட ரீதியில் செய்து வருகின்றது. அப்படியான நிலையில், வடக்கு கடற்பரப்பு இந்தியாவின் கொடுங்கரங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நிம்மதியில்லை. யாரினாலும் நிம்மதியில்லை என்ற நிலைதான் நீடிக்கின்றது. தென் இலங்கையின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக குரல் எழுப்பும், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் பெரிதாக கண்டு கொள்ளவதில்லை. ஏன் இந்த நிலை என்று தேடினால், அவர்கள் இந்தியாவை எந்தக் காரணத்தைக் கொண்டும் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற மன நிலையோடு இருக்கிறார்கள். வடக்கு மீனவர்களின் உரித்தையும், கடல் வளப்பாதுகாப்பையும் உறுதி செய்வது என்பது, எப்படி இந்தியாவை பகைத்துக் கொள்ளவதாக அமையும் என்று தெரியவில்லை. ஆனால், பல தமிழ்த் தேசியத் தலைவர்கள், இந்திய மீனவர்கள் அத்துமீறல்கள் குறித்து அமைதியாக இருக்கிறார்கள். அதற்கு எதிராக ஒரு கருத்தைக்கூட தெரிவிக்கிறார்கள் இல்லை. இந்த நிலை என்பது, அவர்களின் அரசியல் வங்குறோத்துத் தனம் மட்டுமில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான நவடிக்கைகளுக்கு துணைபோகும் செயற்பாடாகவும் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஏற்கனவே, இலங்கையின் கடற்பாதுகாப்புத் தொடர்பிலும் கடல் எல்லையை வரையறுப்பது சார்ந்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தினாலே, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை 90 வீதம் தடுத்துக் கொள்ள முடியும். நல்லாட்சிக் காலத்தில் தனிநபர் சட்டத்திருத்தமாக எம்.ஏ.சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதனை, முழுமையாக செயற்படுத்த வேண்டும். அந்தச் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால், இந்திய பெருவள்ளங்களின் அத்துமீறலை படிப்படியாக குறைத்துக் கொள்ள முடியும். ஏனெனில், எல்லைதாண்டி அத்துமீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியப் படகுகளை கையகப்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறான கையகப்படுத்தல்கள் தொடர்ந்தால், எல்லை தாண்டி வருவது தொடர்பில் இந்திய மீனவர்கள் அச்சப்படுவார்கள்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடித்தல் தொடர்பில் இன்னொரு குறிப்பிடத்தக்க விடயமொன்று உண்டு. அதாவது, இலங்கை எல்லைக்குள் அத்துமீறும் இந்தியப் படகுகளில் பெரும்பாலானவை, பெரு முதலாளிகள், நிறுவனங்களைச் சார்ந்தவையாகும். மாறாக, பாரம்பரிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய சாதாரண மீனவர்கள் பெரிதாக எல்லை தாண்டுவதில்லை. அதுபோல, அவர்கள் கடல் வள அழிப்பிலும் ஈடுபடுவதில்லை. அப்படியான நிலையில், இந்தியப் பெருமுதலாளிகள், நிறுவனங்களுக்குப் பயந்துதான், இலங்கைக் கடற்றொழில் அமைச்சும், கடற்படையும், பொலிஸாரும் முறையாக நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் இல்லையா என்று கேள்வி தவிர்க்க முடியாததாகும்.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பைக் காப்பாற்றுவது தொடர்பில் வடக்கு மீனவ அமைப்புக்களும், சமூக இயக்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும். அதன்மூலம்தான் பாரிய வள அழிப்பையும், வாழ்வாதார இழப்பையும் தடுக்க முடியும். அதற்காக போராட்டங்களை மாத்திரம் முன்னெடுக்காது, நீதிமன்ற வழக்குகளினூடு ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள கடல் வளப் பாதுகாப்புத் தொடர்பிலான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அதுபோல, வடக்குக் கடல் பாதுகாப்பு என்பது, மீனவர்களின் பிரச்சினை மாத்திரம் என்ற மனநிலையை தமிழ்த் தேசியப் பரப்பு கைவிட வேண்டும். மாறாக, வடக்கு கிழக்கின் நில உரிமைக்காக ஒருங்கிணைவது மாதிரி கடல் பாதுகாப்புக்காகவும் இணைய வேண்டும். இல்லையென்றால், விரைவில் வடக்கின் கடல் அன்னையை வெளியார் அபலையாக்கிச் செல்வார்கள்.



# சுயநல அரசியலினால் தமிழரசியலையே சீர்குலைத்தவர் சம்பந்தனே!

உலகிலே தமிழர்கள் கூட்டாக சிந்திப்பது என்பதும் ஐக்கியமாக ஒருமித்த கருத்துடன் நகர்வது என்பதும் மிகவும் அபூர்வமானவை. ஒவ்வொருவரும் தத்தமது நலனியல் இருப்பிற்கமைவாகவே செய லாற்றுகின்றமைதான் வாடிக்கையாக இருக் கிறது. புலம்பெயர்ந்து பல நாடுகளுக்குச் சென்றாலும் தமது பரவணிக்குணத்தை அவர்கள் கைவிடுவது இல்லை. அதுதான் தமிழர் என்று ஓர் இனம் உண்டு, அவர்களுக்குத் தனியே ஒரு குணம் உண்டு என்று சொன் னார்களோ தெரியவில்லை.


வி.எஸ்.சிவகரன்

எனவே யாவரையும் அரவணைத்துச் சம மாக மதித்து, தாராளவாத சிந்தையில் மிளிர்வது என்பது மிகவும் அரிதிலும் அரிது. அதிலும் பலர் இப்போது நல்லவர் போல் நடிக்கப் பழகிவிட்டார்கள். தாங்கள் செய்வது சந்தர்ப்பவாதம் என்று தெரியாமல் பாசாங்கு செய்யப் பழகிவிட்டார்கள். கூட இருந்து குழிபறிப்பதிலும் நவநாகரிக நடிகர்களாகிவிட்டனர். மற்றவர் மீது காழ்ப்புணர்வு, கசப்புணர்வு, பசப்புணர்வு என சமயோசித நடிப்பில் நாள்களைச் சாமர்த்தியமாக நகர்த்துகிறார்கள். அடுத்தவரின் ஏற்றமிகு மாற்றத்தில் எமக்கு எந்த மகிழ்வும் வருவதில்லை. குடும்பங்க ளுக்குள்ளேயே கூட பணமும் அதிகாரமும் வந்தவுடன் விரிசல்தான் தோன்றுகிறது. காரணம் சுயநலமே. சாமானியனை விட படித்தவர் என சொல்லப்படுபவர்களே இதில் வல்லவர்களாக உள்ளனர். எதிர்வீட்டு ஏகாம் பரத்தின் மனைவி கனகாம்பரம் சூடிக் கொண்டால் பின்வீட்டு பீதாம்பரத்தின் மனைவிக்கு ப் பிடிக்காதாம் என்றார் சிரித்திரன் சுந்தர். தமிழர்களின் சுயநலத்திற்கு அவர் கூறிய மிக யதார்த்தமான ஒப்பீட்டு உதாரணம், இன்றும் இதுவே நீள்கிறது.

வாழ்வியல்தான் இப்படி என்றால் இனவிடுதலை என வரிந்து கொண்டவர்களும் தமக்குள் விவகாரமிட்டுக் கொண்டனர். இப்போதும் தமக்குத் தாமே வல்லாளர்கள் என வாய் வாதம் செய்கின்றனர். இதில் அரசியல்வாதிகள் எதற்கும் அஞ்சாதவர்கள். எந்த விதமான பஞ்சமா பாதகத்தையும் தமது இருப்பு நலனுக்காக நிறைவேற்றுவார்கள். அதிலும் தேர்தல் அரசியல் என்றால் சொல்லவா வேண்டும்? அறம் என்ற பேச்சுக்கே இடமில்லை. உலகம் முழுவதும் இது தற்போது ஒரு கலாசாரமாக பரவி வருகிறது. இதில் இடதுசாரிகள் சில காலத்திற்கு முன்னர் ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றினார்கள். தற்போது அவர்களும் வலதுசாரிகள் போல் இலாபகரமான சந் தர்ப்பவாத அரசியலுக்குள் புகுந்து விட்டனர்.

ஆகவே இவை இன்று உலகம் முழுவதும் படர்ந்து வியாபித்து விட்டது. அதை அடியோடு அகற்றுவது என்பது சாத்தியமற்றது. இதில் இனவிடுதலை எனும் கோட்பாட்டில் விடுதலை அறவுணர்வுடன் வார்த் தைகளால் வர்ணிக்க முடியாத தியாகங்களை எல்லாம் செய்து இழக்கக் கூடாத அத்தனை இழப்புக்களையும் சந்தித்து நாதியற்ற இனக்குழுமத்தில் உள்ளவர்களும் சர்வசாதாரணமாக சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்பதே மிகுந்த வேடிக்கையான வேதனையாகும்.

இதில் முழுக்க முழுக்க பதவி சுகத்தை அனுபவிக்க முனைந்தவர், அனுபவித்தவர் சம்பந்தன். சுயநலத்தின் மொத்த வடிவமாகவே காணப்பட்டதன் விளைவாக இன்றைய தமிழ் அரசியலின் திரிசங்கு நிலைக்கு வழிவகுத்தவர். தேசிய தலைவர் பிரபாகரனுக்கு பின்னர் தமிழர் அரசியலை கடந்த இருபது ஆண்டுகளாக உள்கட்சி சனநாயகம் இல்லாமல் தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தவர் என்பதை மறுப்பதற்கில்லை.

தொடர்ச்சி▼

# சுயநல அரசியலினால் தமிழரசியலையே சீர்குலைத்தவர் சம்பந்தனே!

தொடர்ச்சி▲

ஏனெனில் மூன்று தசாப்த யுத்த இடைவெளியால் போட்டிக்கு எவரும் இல்லை, அதனால் ஏகன் அனேகன் எனும் நிலையில் சனநாயக சர்வாதிகாரியாக இருந்தார்.

ஆனால் இவ்விதமான அதிகார மையத்தில் இருந்த போதும் தமிழ்மக்கள் கண்ட பயன் ஏதுமில்லை. ஒரு தோற்றுப்போன தலைவராகவே காணப்படுகிறார். வலிமையான தமிழ்த்தேசிய கொள்கைக் கோட்பாடு இல்லாதவர் வேறு வழியின்றி பதவிக்காக புலிகளை ஆதரித்தவர். 1961 சத்தியாக்கிரகத்திற்கு தற்செயலாக போனபோது கைதாகி சிறை சென்ற போது மன்னிப்பு கடிதம் கொடுத்து உடனடியாக வெளியே வந்ததில் இருந்து சம்பந்தனின் தேசிய விசுவாசம் ஊரறிந்ததே. இது மட்டுமன்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை உட்பட சிலரின் படுகொலையில் இவர் பங்கு உண்டென விமர்சனங்கள் இல்லாமலில்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினார்களான நீலன் திருச்செல்வம், அமிர்தலிங்கம் ஆகியோர் கொல்லப்பட்ட பின் தேசிய பட்டியல் கேட்டு இவர் நடத்திய பதவிச் சண்டையை எவரும் மறந்து விடமாட்டார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவராக இருந்த காலத்தில் அங்கத்துவ கட்சிகளின் சனநாயக குரலுக்கு ஒரு போதும் செவிசாய்த்தவர் இல்லை எனும் குற்றச்சாட்டும் உண்டு. தன்னால் வலிந்து அரசியலுக்கு அழைத்து வந்த விக்கினேஸ்வரன், சுமந்திரன், குகதாசன் போன்றவர்கள் கூட இவருக்கு எதிராகவே மாறினார்கள். அல்லது மாறும் சூழலை ஏற்படுத்தினார்.

ஒரு, தீர்க்கதரிசனமான – திடமான – கோட்பாட்டுடன் அவர் தலைமை தாங்கவில்லை. 2015 சனாதிபதி தேர்தலில் கூட நிபந்தனை அற்ற ஆதரவு வழங்கி எதிர்கட்சி தலைவராக இருந்த போதும் ஒற்றை ஆட்சிக்குள் சமஷ்டி என்றது போல் எதிர்க்கட்சிக்குள் ஆளுங்கட்சியாக இருந்தார்கள். சகல விடயங்களிலும் நிபந்தனை அற்ற ஆதரவு வழங்கி ஆட்சியிலும் நிழல் அமைச்சர்கள் போல் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்களாகவும் தொடர்ந்னர். எதுவுமே நிகழவில்லை. கம்பிரலியவோடு கரைந்து போனார்கள்.

மிகப் பெரும் தமிழ்த் தலைவர்களை எல்லாம் ஏமாற்றிய சிங்கள அரசியல்வாதிகளுக்கு சம்பந்தன் ஒரு பொருட்டல்லர். அது சம்பந்தனுக்கும் புரியாமல் இல்லை. தனது பதவியைப் பாதுகாக்கவே சம்பந்தன் பல விடயங்களில் அமைதி காத்தார். எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் இந்தியா வருமாறு அழைத்த போதும் கூட அசட்டை செய்தார் – சிங்கள மக்கள் கோவிப்பார்கள் என்று. தனது பதவியைத் தக்கவைக்க எந்த எல்லைக்கும் போகக்கூடியவர் என்பதை பல முறை நிரூபித்தவர்.

இவர் உண்மையான உணர்வுள்ள தமிழ்தேசிய வாதியாக இருந்திருந்தால் புலிநீக்கத்தையும், தமிழ்த்தேசிய நீக்கத்தையும் கூட்டமைப்புக்குள் ஏற்படுத்தியிருக்கமாட்டார். அதை அவர் முழு விருப்புடன் செயற்படுத்தினார். அதில் வெற்றியும் பெற்றார். தனக்குப் பின்னால் கூட்டமைப்பு வலிமையாக இருக்கக்கூடாது என்பதில் அவருக்கு பெரு விருப்பு இருந்துள்ளது . அதனால்தான் அவர் விடயங்களைத் திட்டமிட்டு நகர்தினார் என்பது மறுப்பதற்கில்லை.. இன்றைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிலைமைக்கு அவரே முழுப் பொறுப்பு. திருகோணமலையில் அதிக இடங்கள் சிங்கள மயமாகியது இவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில்தான். அவற்றை தடுப்பதற்கு வினைத்திறனாக என்ன செய்தார்? தானும் தந்தை செல்வநாயகம், தலைவர் பிரபாகரன் ஆகியோரின் நிலையை எட்டி விட வேண்டும் என்பதே இவரது கனவாக இருந்தது. ஆனால் இவருடைய எண்ணமும் செயலும் சுண்டெலி மனிதன் ஆகிய கதையாகத்தான் இருந்தன.

அதனால்தான் தோற்றுப்போன தலைவரானார். கடந்த இருபது ஆண்டுகளாகத் தமிழர் அரசியலை தனக்குள் வைத்திருந்தவர். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பு மனுவில் தனது ஆதரவாளர்களை பெயரிட முடியவில்லை, தனது வேண்டுகையைக் குகதாசன் கேட்கவில்லை என்று சேனாதிராசா, சுமந்திரனிடம் முறைப்பாடு செய்யும் பரிதாபகரமான நிலையில் இருந்தார். இதுமட்டுமின்றி தமிழரசுக் கட்சியின் இன்றைய குழப்ப நிலை இல்லாமல் ஒருவரைத் தலைவராக ஆக்கியிருக்கலாம். சம்பந்தன் நினைத்திருந்தால் அதைச் செய்திருக்கலாம். ஏட்டிக்குப் போட்டி அரசியலில் தனது மகன் மூலமாக ஒரு வேட்பாளரை ஆதரித்தார். ஒரு பெருந்தலைவர் செய்யும் வேலையா இது? இதில் சேனாதிராசாவுக்கும் சம்பந்தருக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ஒரு சாதாரண வட்டார உறுப்பினர் போல் தன்னை எண்ணி, திருகோணமலை மாவட்டக் கிளையில் தனது ஆதரவாளர்கள் இல்லை என்று சேனாதிராசாவுக்கு முறைப்பாட்டுக் கடிதம் எழுதினார். இவர் சிறுமைக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

சம்பந்தன் தொண்ணூறு வயது கடந்தும் ஓய்வு பெறாமல் தொடர்வது பெரும் அபத்தம். ஆகக் குறைந்தது எண்பது வயதிலாவது ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி தானே அடுத்த தலைமையை தெரிவு செய்திருக்க வேண்டும். தனது அனுபவத்தையும் தனது தவறுகளையும் தான் இதுவரை பேச முடியாமல் போன சில, பல உண்மைகளையும் கூறிவிட்டு ஓய்வுக்கு சென்றிருக்க வேண்டும்.

அவ்வாறு சென்றிருந்தால் ஓரளவுக்கேனும் நன்மதிப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் உடல் நிலை தளர்ந்தும் பதவியை விடமால் வைத்திருப்பதால் தமிழ்மக்களுக்கோ தமிழரசுக் கட்சிக்கோ என்ன பயன்? காலம் இவர் போன்றவர்களை துரோகியாகவே பதிவு செய்யும் என்பதை சம்பந்தன் உணரத்தவறியதே சம்பந்தனின் வரலாற்றுத் தவறு.

இவரது வரலாற்றுத் தவறை ஏனையவர்களவது உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் காலம் அவர்களையும் காலாவதியக்கிவிடும்.

# குற்றவியல் சட்ட மறுசீரமைப்பு திருத்தங்கள் மீளப் பெறப்படும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் மீளப் பெறப்படும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தண்டனைச் சட்டக்கோவைக்கு அமைவாக, 16 வயதிற்குட்பட்ட சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது உடல் ரீதியான தொடர்புகளை வைத்திருந்த ஒருவருக்கு தண்டனை வழங்கப்படும்.

எனினும், 14 முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட சிறுமிகள் தங்களின் விருப்பத்துடன் தொடர்புகளை பேணிய தகவல்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன.

கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க அமைச்சுக்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், நீதிபதியினால் தண்டனை உத்தரவை பிறப்பிக்கும் வகையில், தண்டனை கோவையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை இரத்து செய்யுமாறு சிவில் அமைப்புகளும் மகளிர் அமைப்புகள் சிலவும் கோரிக்கைகளை முன்வைத்தன.

அத்தகைய தரப்பினருக்கு மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்.

கலந்துரையாடலுக்கு பிறகு திருத்தம் அவசியமா, எவ்வாறான திருத்தம் மெற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்." – என்றார்.

# வாகனத்தில் அதிகளவு லேகியத்தை எடுத்து வந்தவர் நாவற்குழியில் கைது

(த.சுபேசன்)



உரிய அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி அதிகளவான லேகியப் பைக்கெற்றுக்களை வாகனம் ஒன்றில் ஏற்றி வந்த நபர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாவற்குழிப் பகுதியில் வைத்து மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தென்னிலங்கையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மகேந்திர ரக வாகனமும் அதிலிருந்த 72லேகிய பைக்கற்றுக்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



### மாணிக்க பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

# ஹட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தமிழ்ப் பாடசாலைகளுக்கு நாளை லீவு

ஹட்டன் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தமிழ்ப் பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஹட்டன் மாணிக்க பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை முன்னெடுக்கப்படுமென மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் மடஹபொல தெரிவித்துள்ளார்.

# காசநோய் தினம் இன்று

● நடராஜன் ஹரன்

காசநோய் இன்று உலகில் 1.7 மில்லியன் மக்களை ஆண்டுதோறும் கொன்று குவிக்கும் ஒரு முக்கிய உயிர் கொல்லி நோயாக உள்ளது.

1880 களின் தொடக்கத்தில் ஐரோப்பா, அமெரிக்கக் கண்டங்களில் காச நோய் தீவிரமாக இருந்த காலம். பல மருத்துவ விஞ்ஞானிகளும் நோய்க் கான காரணங்களைக் கண்டறிய ஆய்வில் ஈடுபட்டிருந்த நேரம். அந்த நேரத்தில் 1882 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் திகதி ஜேர்மனி மருத்துவ விஞ்ஞானி ராபர்ட் காஹ் என்பவர் காச நோயை உண்டாக்கும் பாசிலஸ் என்ற நுண்ணுயிரியைக் கண்டறிந்தார். அந்தக் காலத்தில் மருத்துவ உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்திய கண்டு பிடிப்பு இது.

ஆண்டுதோறும் 90 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு, ஏற்கனவே காசநோய் உள்ளவர்களிடமிருந்து பரவுகின்றது. இந்நோயால் ஆண்டுதோறும் 17 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். மேலும், உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர், இந்த நோயால் பாதிக்கப்பட் டுள்ளனர்.

காச நோய் (டியூபர்க்குலோசிசு) என்பது மைக்கோ பாக்ரீரியா என்னும் நுண்ணுயிரியின் தாக்குதலால் ஏற்படும் கடும் தொற்று நோயாகும்.

தொடர்ந்து சளி இருப்பது, எடை குறைவு, காய்ச்சல், மார்பு வலி, இரவில் வியர்ப்பது, கால், கைகள் பலம் குன்று தல் போன்றவை காசநோய்க்கான அறிகுறிகளாக இனங்காணப்பட்டுள் ளன. இன்று அனைத்துலக காச நோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.


1996 ஆம் ஆண்டில் இருந்து உலக சுகாதார அமைப்பு மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத் தும் முகமாக இந்த நாளை அனைத் துலக காச நோய் தினமாகப் பிரகடனப் படுத்தியது.

காச நோய் பரவுதல் பற்றியும், அதைத் தடுப்பது குறித்தும் விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் விதமாக மார்ச் 24 ஆம் திகதி சர்வதேச காச நோய் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா, நைஜீரியா மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட 22 நாடுகளில் காசநோயால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண் ணிக்கை அதிகம்.

ஆரம்பத்திலேயே இதற்கு சிகிச்சை மேற்கொள்வது, நீண்ட கால சிகிச்சை ஆகியவை இந்த நோயிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளாகும். காச நோய் உள்ளவர்கள், தயங்காமல் மருத்துவர்களை அணுகிச் சிகிச்சை எடுத்துக் கொள்ளல் ஆகியன இந்த நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்வ தற்கான சிறந்த முறையாகும்.

அவ்வகையில், அரசு தனியார் நிறுவ




னங்கள் புத்திஜீவிகள் என்று அனைவரும் காச நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, மக்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காச நோய் எனப்படும் டி.பி. ஒரு காலத்தில் உயிர்க்கொல்லி நோய். இன்றைக்கும் அந்த நோய் பரவும் முறைகளுக்கும் ஏற்படுத்தும் பாதிப்புக ளுக்கும் குறைவில்லை. ஆனால்,அந்த நோயைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் இருப்பதுதான் ஒரே மாற்றம்.

டியூபர்செல் பாசிலஸ் அல்லது டியூபர் குளோசிஸ் என்பதன் சுருக்கம் தான் டி.பி. வீட்டில் உள்ள ஒருவருக்கு இந்த நோய் வந்தால், மற்றவர்கள் அஞ்சி ஓடும் நிலை முன்பு இருந்தது. இன்றோ காச நோய் உயிரைக் காவு வாங்கக் கூடிய அளவுக்குக் கொடிய நோயாக இல்லை. நோய் வந்தால் சில மாதங்களுக்கு முழுமையாக மருந்து, மாத்திரை எடுத்துக் கொண்டால் போதும். நோயை விரட்டிவிடலாம்.

“இருமல், தும்மல், எச்சில் ஆகியவற் றிலிருந்து காற்றில் பரவும் தன்மை கொண்டது காச நோய். எனவேதான், அந்தக் காலத்தில் இந்த நோய் பெரும் அச்சத்தை உண்டாக்கியது. இன்றைக் கும் அதே வழிமுறைகள் காரணமாகவே பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்” என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகே காச நோயின் தன்மை குறித்து மருத்துவ உலகம் அறிய முடிந்தது. மருந்துகள் கண்டுபிடிக்கும் பணியும், இதன் பின் னரே தீவிரமடைந்தது.

இன்று இந்த நோய்க்கு மேம்பட்ட சிகிச்சை முறைகள் இருப்பதற்கு இந்தக் கண்டுபிடிப்பே முன்னோடி. இந்தக் கண்டுபிடிப்புக்காக 1905 ஆம் ஆண்டில் மருத்துவத்துக்கான நோபல்பரிசு ராபர்ட் காஹ்க்குக் கிடைத்தது.

இந்தக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு விழா 1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற போது, காச நோய் மற்றும் இருதய நோய்களுக்கு எதிரான அனைத்துலக அமைப்பு, இந்த நோய் பற்றி விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் விதமாக மார்ச் 24 ஆம் திகதியை உலகக் காசநோய் நாளாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

இதை ஏற்று 1996ஆம் ஆண்டு மார்ச்24 ஆம் திகதி முதல் உலகக் காச நோய் தினம் கடைபிடிக்கப்படும் என்று உலகச் சுகாதார அமைப்பு அறிவித்தது.

**எச்சில் துப்பாதீர்கள்**

உலகிலேயே காச நோயாளிகள் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்த நோய் மிகச் சுலபமாகப் பரவக்கூடிய ஒரு நோய். காச நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருமினாலோ, சளி மற்றும் எச்சிலைத் துப்பினாலோ அதிலிருந்து வெளிவரும் கிருமிகள் காற்றில் கலந்து மற்றவர்களுக்கு நோயை உண்டாக்கிவிடும்.

நம் நாட்டில் பொது இடங்களில் எச்சில், சளி துப்புவது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. இருமும்போது வாயையும், மூக்கையும் மூடிக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு குறை வாகவும் அலட்சியம் அதிகமும் உள்ள வர்கள் நம்மிடையே அதிகம். இந்த நோய் அதிகம் பரவ இது முக்கியக் காரணம்.

கூட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் இருக்கும் போதும் மருத்துவமனைகள், சிறைகள், ஆதரவற்றோர் முகாம்கள் என எந்தப் பொது இடத்துக்குச் சென்றாலும், முகமூடியை அணிவது நல்லது. இதேபோல், பஸ், ரயில் பயணங்களின் போதும் இதைக் கடைபிடிப்பது காசநோய்த் தடுப்புக்குப் பலனளிக்கும்.

காச நோய்க்கு இன்று மேம்பட்ட சிகிச்சை முறைகள் வந்துவிட்டாலும்கூட, இன்றும் இந்த நோயால் பாதிக்கப்படு வர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகளில் ஒவ் வோர் ஆண்டும் இந்த நோய்க்குப் 17 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று கூறுகிறது உலகச் சுகாதார அமைப்பு. ஆண்டு தோறும் 80 - 90 லட்சம் பேர் காச நோயால் பாதிப்புக்கு உள்ளா கின்றனர் என்று அந்த அமைப்பு எச்சரிக்கிறது.

பொதுவாக மூச்சுத் தொகுதியில், நுரையீரலைத் தாக்கி நோயை உண் டாக்கக் கூடியவை காச நோய்க் கிருமிகள். இவை நரம்புத் தொகுதி, நிணநீர்த் தொகுதி, இரைப்பை - குடல்தொகுதி, எலும்பு மூட்டுகள், ரத்த சுழற்சிப் பாதை, சிறுநீரகம், பாலுறுப்பு கள், தோல் போன்ற பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

**சிகிச்சை**

ஆரம்பத்திலேயே இதற்குச் சிகிச்சை மேற்கொள்வது, நீண்ட கால சிகிச்சை ஆகியவை இந்த நோயிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கை. காச நோய் உள்ளவர்கள்,தயங்காமல் மருத்துவர் களை அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசு, காச நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தி, மக்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.03.2024




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும். முடிவுகளை சிறந்த முறையில் எடுப்பீர்கள்.

உங்கள் ஆற்றலுக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கலாம்.

உங்கள் மகிழ்ச்சியை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் ஒன்றாக இருந்து நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப் தியை அளிக்கும். அதிகரிக்கும் பண வரவு திருப்திகர மானதாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் உங்களை ஆரோக் கியமாக வைத்திருக்கும்.




இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்துங்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. முக்கிய முடிவு கள் எடுப்பதை விலக்கி வைக்க வேண் டும். இன்றைய நாள் பாதிப்பு வராமல் இருக்க பொறுமை அவசியம்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. உங் களின் நல்ல தொடர்பும் ஒத்துணர்வும் சகபணி யாளர்களிடம் நல்லுறவை ஏற்படுத்தும். அனைத்திலும் நல்லதையே காணுங்கள்.

எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள் ளுங்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்களின் நட்பு அணுகுமுறையால் உங்கள் துணை கவரப்படுவார்.




சமயோஜிதமாக யோசித்து இன் றைய பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நம்பிக்கையுடன் இந்த நாளை எதிர்கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

பணிகளை சிறப்பாக திட்டமிடுவதும் நேரத்தோடு பணி புரிவதும் உங்கள் நிலையை உயர்த்தும். நேரத்தை நிர்வகித்தால் அதிக சக்தியை இழக்க வேண்டாம்.

உங்கள் துணையுடன் இணக்கமான மகிழ்ச்சியான உறவைப் பராமரியுங்கள். யதார்த்தமான அணுகு முறை மேற்கொள்ளுங்கள். இருவருக்கும் பொதுவான இலட்சியத்தை அமைத்து எப்பொழுதும் ஒருவருக கொருவர் ஆதரவாக இருக்க வேண்டும்.

பணத்தை கையாள கற்றுக் கொள்ளுங்கள். பய னுள்ள விஷயங்களுக்கு பணத்தை பயன்படுத்துங்கள்.




இன்று நாள் சிறப்பாக இருக்கும். உங்களிடம் உற்சாகம் அதிகமாக காணப் படும். செய்யும் செயலில் வெற்றி பெறு வீர்கள். இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.

உங்கள் பணியில் நற்பலன்கள் காண்பீர்கள். உங்களின் சுய உந்துதல் காரணமாக வளர்ச்சி காணப்படும். இன்று உற்சாகமாக காணப்படு வீர்கள். இன்றைய நாள் பிரகாசமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்கு வெகுமதி கிடைக்கும்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்லுறவு வளரும். நிதிநிலையில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. ஆன்மீக விஷ யங்களுக்கு விரும்பியே பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்று பொறுமையாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிறருடன் பேசும் போது ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டும். உங்கள் வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளப் படும் என்பதால் தேவையற்ற இடங்களில் பேச வேண்டாம். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க் கவும்.

சிறப்பான முறையில் பணியாற்றுங்கள். உங்கள் பணியாற்றும் முறை காரணமாக தவறுகள் குறையும். அனைவரிடமிருந்தும் பாராட்டும் கிடைக்கும். பணிகளை ஆற்றும் போது கவனம் இழக்க வேண்டாம்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும் என்றாலும் நேர்மறை எண்ணத்தோடு செயல்பட்டால் இது கவலை அளிக்கும் விஷயமாக இருக்காது.




உங்கள் செயல்களில் எதிர்பாராத தடைகளை எதிர்கொள்வீர்கள். மனம் தளராமல் தைரியமாக நம்பிக்கையோடு பிரச்சினைகளை எதிர்கொள்ளுங்கள். இது பிரச்சினையின் தீவிரத்தை குறைக் கும். நிகழ்வுகளை எதிர்கொள்ளும் நம்பிக்கை பிறக்கும். கட்டுப்பாட்டுடன் இருந்தால் இன்று சிறந்த பலன் கிடைக்கும்.

கவனமாக இருக்க வேண்டும். எந்த விஷயத்திலும் அலட்டிக்கொள்ளாமல் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை 100 சதவிகிதம் முயற்சியு டன் விரும்பி செய்வதன் மூலம் நிச்சயம் அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் துணையுடன் சிறிது நேரம் கழிப்பது சிறந்தது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நீங்கள் அந்தரங்கமாக ஆலோசிக்க வாய்ப்பு கிடைக்கும்.




இன்று நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். தொண்டு நடவடிக்கைகள் இன்று ஆறுதல் தரும். ஆன்மீக ஈடு பாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியில் முன்னேற்றம் காண கவனம் தேவை. உங்கள் கவனத்தைச் சிதற வைக்கும் விஷயங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொண்டு சிறப்பான பலன்களை காணலாம்.

உங்கள் துணையுடனான உறவில் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் கருத்தை ஒருவர் மதித்தால் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட்டு கருத்து வேறுபாடு மறையும்.

சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் பணம் கரையாமல் பார்த்துக் கொள்ளலாம். இருக்கும் பணத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று அதிர்ஷ்டமான நாள். தடைகளை எளிதாக சமாளிப்பீர்கள். சிறிது அனுசரித்து நடந்தால் எல்லாம் சிறப்பாக அமையும்.

உங்கள் திறமை காரணமாக பணி களை உடனுக்குடன் விரைவாக நல்ல தரத்துடன் வழங்குவீர்கள். உங்களின் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட் டப்படும்.

இருவருக்கும் இன்று சிறப்பான நாள். ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டு நட்புடன் இருப்பீர்கள். இருவரிடையே நல்ல பிணைப்பு காணப்படும்.

உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு பயன் படுத்துவீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக நீங்கள் நல்ல தேக ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.03.2024




இன்று நாள் சீராக இருக்கும். இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப் படும். இதனை திறமையாக பயன்படுத்தி நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

பணியிடத்தில் இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் அனைத்துப் பணிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் ஆதரவுடன் இருப்பார்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இருவரும் நல்ல மன நிலையில் இருப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பண வரவு அதிகரிக்கும். கடந்த சில ஆண்டுகளில் சேமித்ததன் காரணமாக உங்களிடம் காணப்படும் பணம் திருப்திகரமாக இருக்கும். ஆற்றல் நீங்கள் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் மனதில் இருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்க முயலுங்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் யோகா மேற் கொள்வது இன்று பயனுள்ளதாக இருக் கும். எதிர்காலத்தைப் பற்றி மிகுந்த கவலை வேண்டாம். எதிர்காலத்துக்காக இன்றே திட்டமிட்டால் நாளை செழிப்பாக இருக்கலாம்.

இன்றைய நாளில் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றுங்கள். கடைசி நிமிட அவசரத்தை தவிர்க்க வேண்டும். உங்கள் பணி நிமித்தமாக இன்று பயணம் மேற்கொள்ள வேண்டி யிருக்கும்.

சகஜமாகவும் உங்கள் கருத்துக்களை மென்மை யாகவும் உங்கள் துணையிடம் எடுத்துக் கூறுங்கள். உறவில் நல்லிணக்கம் பேண உங்கள் துணையிடம் அமைதியாக விஷயங்களை கையாள வேண்டும்.




நீங்கள் நேர்மறை எண்ணம் கொண்டு தைரியமாக சவால்களை எதிர் கொள்ள வேண்டும். உங்கள் சுய முயற்சி மட்டுமே உங்களின் இன்றைய நாளை பிரகாசமாக்கும். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

சக பணியாளர்களிடம் தொழில் சார்ந்த அணுமுறையை மேற்கொள்ளுங்கள். அமைதியாக இருந்து பிரச்சனைகளை சமாளிக்க கற்றுக் கொள்ளுங்கள். நேர்மையுடன் உங்கள் பணிகளை ஆற்றுங்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு உதவுங்கள்.

உங்கள் துணையுடன் பொறுமை கொள்ள வேண்டும். கருத்து வேறுபாடு காரணமாக சிறிய விஷயங்களை பெரிதாக்காதீர்கள். மகிழ்ச்சியுடன் இருக்க பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.




இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப் படும் ஆற்றல் உங்களை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லும். உங்கள் எண்ணங்களில் காணப்படும் தெளிவு காரணமாக அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும்.

புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதனை முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வேலைகளை எளிதாகச் செய்வீர்கள்.

இருவருக்கும் இடையேயான உறவு சிறப்பாக இருக்கும். இதனால் உறவு வலுப்படும். அவசர தேவைகளை சமாளிக்க சிறைய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்களுக்கு கிடைக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். ஆரோக்கியக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

